**Starting time 01.03 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 162/2013**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K.Menaka, Gr. III Bench Clerk of this court, on 20.01.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிமேகலை | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>2-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** தாவா சொத்து எனது கணவர் மூலம் எனக்கு பாகம் கிடைக்கப்பெற்ற சொத்து என்றால், சரிதான். என்னுடைய கணவரின் தாயார்தான் 2-ஆம் பிரதிவாதி. வா.சா.ஆ.18 ஆவணமான பாகப்பத்திரத்தில் மேற்படி 2-ஆம் பிரதிவாதி தரப்பினர் இல்லை என்றால், சரிதான். இந்து வாரிசுரிமை சட்டப்படி ஒரு ஆண் இறந்தால் அவருடைய தாயாரும் அவருடைய வாரிசு ஆவார் என்று சொன்னால், சரிதான். ஆனால், அவர் இதுநாள் வரை பாகம் கேட்டு வரவில்லை. மேற்படி என்னுடைய கணவரின் சட்டப்படி வாரிசான 2-ஆம் பிரதிவாதியை சேர்க்காததால் மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.18 ஆவணத்தில் 2-ஆம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்காததாலும் அவருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாலும் இந்த வழக்கு செல்லாது என்றால், சரியல்ல.

2. வா.சா.ஆ.18 ஆவணத்தின் மூலம் தாவா சொத்து எனக்கு முழு உரிமை கிடையாது என்று சொன்னால், சரியல்ல. நான் பாகப்பிரிவினை வழக்குதான் தாக்கல் செய்திருக்கவேண்டும் என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்தில் உள்ள என்னுடைய உரிமை

மூலத்தை மறுத்து 2-ஆம் பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்துள்ள நிலையில் நான் விளம்புகை பரிகாரம் கோரததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 2-ஆம் பிரதிவாதி தாக்கல் செய்து பதிலுரைக்கு நான் மறுப்பு பதிலுரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

3. வருவாய் துறையில் சுவாதீனத்தில் இருப்பதற்கு அடங்கல் என்ற பதிவேடு இருக்கிறது என்றால், சரிதான். என்னுடைய வழக்கு தாக்கல் செய்தபோது அதனுடன் அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், தாக்கல் செய்துள்ளேன். தாவா தாக்கல் செய்யும்போது தாவா சொத்தில் நான் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இல்லாததால் மேற்படி அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தற்போது என்னுடைய முதல் விசாரணையிலும் தாவா சொத்திற்கு உண்டான அடங்கலையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்தில் நான் இதுவரை அனுபவத்தில் இல்லாததால்தான் தாவா சொத்திற்கான அடங்கலை நான் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் இந்த நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

4. வா.சா.ஆ.1 முதல் 5 வரை உள்ள கணினி பட்டாவில் என்னுடைய பெயர் வரவில்லை என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.6 முதல் 8 வரையான கணினி பட்டா 2022-ஆம் ஆண்டிற்குண்டானது என்றால், சரிதான். வா.சா.ஆ.10 முதல் 17 வரையான கணினி பட்டாக்கள் 2022-ஆம் ஆண்டு வாங்கப்பட்டது என்றும், வழக்கிற்கு பின்னிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. 22.04.2013-ல் பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்ததாக சொல்வதற்கு ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால், ஆதாரம் எதுவும் இல்லை, ஆனால் அவர்கள் அடித்து தலையில் காயம் ஏற்படுத்தினர்.

5. பாகப்பிரிவினையில் வந்த சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்றால், சரிதான். 1-ஆம் பிரதிவாதி சின்னதம்பி எனது மாமனார் ஆவார். அலுமேலு எனது மாமியார் ஆவார். மேற்படி எனது மாமனார், மாமியாருக்கு ராஜேந்திரன் என்ற மகன் இருந்து அவர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. 3-ஆம் பிரதிவாதி மாணிக்கம் மேற்படி எனது மாமனார், மாமியாருக்கு வாரிசு என்றால், சரிதான். அதற்கு பின்பு வெங்கடாஜலம் என்பவர்

பிறந்து இறந்துவிட்டார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. 4-ஆம் பிரதிவாதி 3-ஆம் பிரதிவாதியின் மகன் என்றால், சரிதான்.

6. மேற்படி 3-ஆம் பிரதிவாதியான மாணிக்கத்திற்கு சத்யா மற்றும் நித்யா என்ற இரண்டு மகள்கள் உள்ளனர் என்றால், சரிதான். எனக்கு பவன்குமார், அம்பிகா என்ற இரண்டு குழந்தைகள் உள்ளனர். மேற்படி வா.சா.ஆ.18-ல் எனது மகன் பவன்குமார் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி வா.சா.ஆ.18-ல் 4-ஆம் பிரதிவாதி மற்றும் மேற்படி சத்யா மற்றும் நித்யா ஆகியோர் தரப்பினர்கள் இல்லை என்றால், சரிதான். மேற்படி 4-ஆம் பிரதிவாதி மற்றும் சத்யா மற்றும் நித்யாவை சேர்க்காததால் வா.சா.ஆ.18 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

7. இந்து வாரிசுரிமை சட்டப்படி தாவா சொத்தில் 1-ஆம் பிரதிவாதிக்கு 1/5 பங்கும், காலம் சென்ற ராஜேந்திரனுக்கு 1/5 பங்கும், 3-ஆம் பிரதிவாதி மாணிக்கம் மற்றும் அவருடைய மூன்று வாரிசுகளுக்கும் சேர்த்து 1/5 பங்கும், காலம் சென்ற வெங்கடாஜலத்திற்கு 1/5 பங்கும், காலம் சென்ற எனது கணவர் முருகனுக்கும் 1/5 பங்கும், மேற்படி எனது கணவர் இறந்ததால், எனக்கும் என் பையனுக்கும் சேர்ந்து பேர் பாதி பாகம் மற்றும் 1-ஆம் பிரதிவாதிக்கும் பேர் பாதி பாகமும் என்றால், சரியல்ல. மேற்டிப 1-ஆம் பிரதிவாதியின் இரண்டு வாரிசுகள் இறந்துவிட்டதால் அவர்களுடைய பாகம் 2-ஆம் பிரதிவாதிக்கு செல்லக்கூடியது என்றால், சரியல்ல. எனவே 2-1/2/5 பாகம் 2-ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. 2-ஆம் பிரதிவாதிக்கு பாகம் கொடுப்பதை தவிர்ப்பதற்காக அவரை தரப்பினராக சேர்க்காமல் ஏற்படுத்திக் கொண்ட வா.சா.ஆ.18 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. ஆகையால், தாவா சொத்தில் முழு உரிமை கேட்க எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால், சரியல்ல.

8. என்னுடைய குழந்தைகள் பவன்குமார் மற்றும் அம்பிகா இயற்கையாக இறக்கவில்லை என்றும், என்னுடைய நடவடிக்கையால் இறந்துவிட்டார்கள் என்றால், சரியல்ல. என்னுடைய வழக்குரையின் 5-வது பத்தியில் என்னுடைய குழந்தைகளின் மருத்துவத்திற்கு நான் செலவு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். ஆனால், என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் என்னுடைய கணவரின் மருத்துவ செலவுக்காக நான் செலவு செய்ததாக

குறிப்பிட்டுள்ளேன் என்றால், எனது கணவருக்கும் நான்தான் செலவு செய்தேன். நான் யாருக்காகவும் எந்த மருத்துவ செலவும் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீதுகள் செல்லாத பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ளதால், மேற்படி ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உண்மைகளை மறைத்து பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. தாவா சொத்துக்குண்டான பட்டா, சிட்டாக்கள் முறையாக விசாரணை செய்து கொடுக்கப்படாததால் அந்த ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் என்னை வீட்டைவிட்டு துரத்திவிட்டார்கள் என்று சொல்வதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று சொன்னால், சரிதான். 22.04.2013-ல் நான் சொல்வது மாதிரி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. சட்டப்படி தாவா சொத்தில் 2/12/5 பாகம் உள்ள 2-ஆம் பிரதிவாதி மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால், இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்தை நான் அனுபவத்தில் இல்லாததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 01.47 P.M.

**ஒப்பம்/- அ.நர்மதாராணி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**